உ

சிவமயம்.

விராடபர்வ

எத்தப்பாட்டு.

சென்னை சூளை
பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை]   1923.   [பை 6.

34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.



அசல் ஜப்பான் பட்டுக்குட்டைகள்.

5 - முழ நீளம் 2½ - முழ அகலமுள்ளது

குட்டை 1 -.க்கு விலை ரூபா 3 8 0

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த புதுபட்டுகுட்டைகள் மிகவும் நேர்த்தியான பளபளப்போடுங்கூடிய பட்டிகளால் செய்யப்பட்டது இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளவும் கமுஸ், குடுத்துணி கோட் முதலிய சொபாய்களின் மேல்போடுந் துப்பட்டாக்களாகவும் சிறுபெண்கள் தாவணியாகவும், உபயோகிக்கலாம் பிறர்க்கு சிரிசளிக்கவும் உபயோகமாகும். இதில் வெள்ளை, ரோஸ் கப்பு, பச்சை, நீலம் மேகவர்ண முதலிய பல வர்ணங்களுண்டு முதல் ·ஒருவர் ஒருகுட்டை வாங்கினால் இதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் எனக்கு உனக்கென்று ஆசைப்படுவார்கள்.

விலாசம்:— **பார்வதி அண்டு கம்பெனி,**

நெ. 34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை, மதராஸ்.

ஸ்ரீ பகவத்கீதை வசனம்.

இந்தப் பகவத்கீதை யென்னும் அரிய நூலானது ஆதியில் வேதவியாசரால் மூன்று காண்டங்களாகவும், பதினெட்டு அத்தியாயங்களாகவும் எழுநூறு சுலோகங்களாகவும், வடமொழியில் இயற்றப்பெற்றது; இவ்வசன நூல் முழுவதையும் இதனீற்றிற் சேர்க்கப் பெற்றிருக்கும் ஸ்ரீபகவத்கீதா மான்மியத்தையும் பக்தியோடு வாசிப்போர்க்கு இதன் உயர்வனைத்தும் நன்கு விளங்கும். மனிதராயினோர்க்கு எல்லாத் தத்துவங்களையும் விளக்கிக்காட்டி, உண்மைப் பொருளையடைதற்குரிய உபாயங்களை உபதேசிக்கும் நூல்களுள் இதுவே முதன்மை பெற்றதாகும் இங்ஙனம் இது சிறப்புடையதாயிருத்தல் பற்றியே ஸ்ரீசங்கராசாரியார், ஸ்ரீராமாநுஜாச்சாரியார், ஸ்ரீமத்வாச்சாரியார் முதலியவர்கள் பாஷியங்களுமியற்றி யிருக்கின்றனர்; இந்நூலை ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்த் திருக்கின்றனர்.

இதன் விலை ரூபா 1 8 0 டை பாக்கிட் சலிஸ்து

பாரவதி அண்டு கம்பெனி,

நெ. 34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

உ

கடவுள் துணை.

விராடபர்வ ஏத்தப்பாட்டு.

காப்பு வெண்பா.

வையகத்திலுள்ள வளமுடையசென்னெலுக்குப்
பையஜலமிறைத்துப் பாங்குடனே—உய்யவிந்த
ஏற்றப்பாட்டைப்பாடி யென்குறைகள் தீருதற்கு
போற்றினேன் ஐங்கரன்றாட் போது.

பிள்ளையாரேவாரி
யெண்ணும் பிள்ளையாரே
எனக்குதெய்வம்நீரே
உனக்கடிமைநானே
ராமர் துணைவேணும்
வாரும்பெருமாளே
காருமிந்தவேளை
வந்துமழைபெய்ய
வாடும்பயிருய்ய
உன்தயவுசெய்வாய்
ஓடிவந்துமாலே
போர்மடுவில்யானை
ஏங்கியழும்போது
ஓடிவந்துகார்த்தாய்

போதுதிருமாலே
பாண்டவர்கதையை
பாங்குடனே சொல்வேன்
(ஒருவதியாலொண்ணு)
புன்னுந்திரியோனும்
மன்னவருங்கூடி
பன்னுபாண்டவர்க்கு
சொன்னதோர்வருடம்
இன்னிலந்தனிலே
பன்னுமக்யாதவாசம்
பாண்டவர்தொலைத்து
வேண்டிவருவாரே
காண்டபன்முதலோர்
(இருபதியாலொண்ணு)

இருந்ததோர்வனத்தில்
பொருந்திடுமுனியை
அரிந்துதரியோனும்
வருந்தியடிபணிந்து
பெருந்தவமுனியே
பேசும்பாண்டவர்க்கு
மோசமாகயாகம்
முடிக்கவேணுமென்றார்
(முப்பதியாலொண்ணு)
முதல்வன்திரியோனும்
முனிக்காளமுனியும்
யினிமையுடன்வேதம்
சனிவுடன்விரித்து
காட்டினில்புகுந்து
காஷ்டங்கள்பொறுக்கி
கனதணலேமூட்டி
முனிவாமந்தரம்நாட்டி
வனந்தனிலேயோமம்
வளர்த்துப்கையாலே
வந்தவொருபூதம்
தந்தபுவிமேலே
(நாற்பதியாலொண்ணு)
நாரணரறிந்து
காரணமுனிசெய்
காரியயாயாகம்
தாரணியின்மீது
சண்டனைநினைந்து
தான்வரவேசெய்தார்
தருமருமறிந்து
வருபிரமசாரி
யொருவேடமெடுத்து
வருமையுடன்வந்தார்
(ஐம்பதியாலொண்ணு)
ஐவருமேகண்டு
அழுதுவந்தபிள்ளை
அழைத்துமேயெடுத்து
அந்தணரேவாரும்
சிந்தையில்விசனம்
செப்பிடவேவேணும்
டொப்பில்மறையோனே
இப்புவிதனிலே
எனக்கொருவிரதம்
(அறுபதியாலொண்ணு)
அந்தமறையோனும்
ஐவரைவணங்கி
செய்யுபாயனம்
செய்யவேணுமென்று
ஐவரையடுத்தேன்
அதற்கொருகலைமான்
அரியகோலகொண்டு

பெருகிடும்வனத்தில்
வருகும்வழிதன்னில்
(எழுபதியாலொண்ணு)
என்கையிலிருக்த
வின்பமாகுந்தோலே
இவ்வனக்கலேமான்
கவ்வியேபரித்து
கடிகையில்மறந்து
செடியினிலொளித்து
சேர்ந்துபோனதென்றான்
சிறுவன்பிரம்மசாரி
சேதியையறிந்து

(ஒன்பதியாலொண்ணு)
என்றுமொழிகேட்டு
எடுத்தபாணம்வில்லும்
எழுந்திஐவர்தானும்
ஏகுமான்வழியே
போகும்வழிதேடி
எத்திசையும்பார்த்து
இருந்தமானேநோக்கி
இளைத்துமேதிரிந்தார்
இந்தவகைபாலே
(தொண்ணூருடலொண்ணு)
தொந்தமாகுங்காட்டில்
தொடருமூழையாலே
தோன்றும் வெய்யலாமே
தூக்கமுமயக்கம்
தாகவிடாயாலே
தருமருந்தளர்ந்து
தாகவிடாயாலே
தண்ணீர்கொண்டுவா
தம்பியரைமேவ
தக்கதோர்வனத்தில்
புக்கிடுந்தடாகம்
பொருந்துபுனலள்ளி
அருந்துஞ்சகாதேவன்
அபபவேமயங்கி
மெய்புடன்விழுந்தான்
அத்திபிகான
ஆற்கும்வீமசேனன்
அன்புடையநால்வர்
அள்ளுபுனலள்ளி
ா-பிள்ளையாரேவாரி
பெரியவனக்கண்ணில்
பேதமாயிருக்க
ஆதியாகதருமர்
அம்மொழியறிந்து
அடவியில்புகுந்து
அரியபொய்கைநீரே

அன்புடன்யெடுக்க
அந்தகன்மறுக்க
அருவுருவங்காட்டி
குருமொழியுணர்ந்தார்
கொண்டு தம்பிமாரை
அண்டருமகிழ்ந்தார்
அனைவருமெழுந்தார்
இக்கதையிருக்க
முக்கியவிராடன்
அக்கதையைச்சொல்வேன்
அறிந்திருங்கள்தோழா
(ஒருவதியாலொண்ணு)
ஓங்குபுகழாளர்
பாங்குதுருநாடர்
பாண்டவர்களைவர்
ஆண்டபுவியெல்லாம்
தாண்டியேசூதாடி
தரணியெல்லாந்தோத்தர்
தோர்த்துவிட்டுபோனூர்
திரியோதனராஜன்
சொன்னபிரகாரம்
பனிரண்வருஷம்
பாரவனவாசம்
திரமுடனேசெய்தார்
(இருப்தியாலொண்ணு)

இரைவரைவர்தாமும்
முறைமுறையாவேஷம்
மறையவர்மடையன்
மானமில்லாபேடி
வாசித்துரையாளன்
காலிதனைமேய்ப்போன்
காரிழைபணிப்பெண்
நேரிழையாளர்க
விராடபுரஞ்சேர்ந்தார்
(முப்பதியாலொண்ணு)
முன்னவனைக்கண்டு
மன்னவன்பணிந்தான்
மறையவரேவரும்
வருடமிங்கேவாழும்
வரிசையுடனென்றன்
நகுலசகாதேவன்
நலமுள்ளபாஞ்சாலி
அனைவருமிருக்க
(நாற்பதியாலொண்ணு)
நாள்பலகடந்து
தோள்பலத்தவீமன்
மடையனையழைத்து
மல்லுகட்டச்சொன்னூர்
இப்படியிருக்க
அப்புறமிருந்து

ஆனதொருமல்லன்
வென்றபலசாலி
எனக்கெதிரியுண்டோ
யென்றுபலம்பேசி
செங்குபட்டரப்போ
மடையனையழைத்து
மல்லுசெய்யச் சொன்னர்
மந்தமல்லனுடை
சுந்திரன் முனிந்தான்
(ஐம்பதியாலொண்ணு)
அவனுமிவன்மேலே
ஆர்த்துவந்தெதிர்த்தான்
தோளோடேதோள்முட்
டுடைகளையறைந்து [டி
முடியில்முடிமுட்டி
மூர்க்கமாயிடித்து
முகத்தினிலறைந்து
நகைத்துவிழமோதி
துவைத்துவிட்டானப்போ
(அறுபதியாலொண்ணு)
அரசனுமகிழ்ந்து
மடையனையழைத்து
மார்புறத்தழுவி
ஆரமும்பதக்கம்
ஆடைமுதலெல்லாம்
வேணதுங்கொடுத்தார்
வீமனுமகிழ்ந்தான்
தாமுறையுநாளில்
கீசகனும்வந்தான்
(எழுபதியாலொண்ணு)
ஏந்திழையைக்கண்டு
மோகமிகக்கொண்டான்
தோகையும்பயந்து
சதர்க்கனைக்கு சொன்னுள்
அதற்குப்பின்னவனும்
அனங்கன்சரத்தாலே
மனங்கதைந்துகொந்து
வண்ணமகள் தன்னை
கண்ணைவே தொடர்ந்தான்
(எண்பதியாலொண்ணு)
ஏங்கிமனநொந்து
மாங்குயிலைப்போலே
மன்னன்சபைமுன்னே
மண்மிசைவிழுந்தாள்
அர்தகொடும்பாவி
அந்தமடமானை
கைப்பிடிக்கவென்று
வெய்யநினைவானன்
சூரியபகவான்
தூதனையனுப்பி

பாதகனைத்தள்ளி
பட்சம்வைத்துக்கார்த்தா
(தொண்ணூறுடனொண்ணு
தோருதபனடயன்
நேராகமடக்கி
ராத்திரியில்ஜாடி
போற்றிரம்புரிந்து
பூமியிற்புரட்டி
குற்றிவிழமோதி
தற்றிதலைசாய
மோதிஞன்படையன்
கீசகன்பதைத்து
கிலேசமுற்றுமாண்டான்
பாதகன்மடிய
பாஞ்சாலியுங்கண்டு
தீர்ந்தேன்பயமென்றுள்
(உா-பிள்ளையாரேவாரி)
பின்னுந்தம்பிமார்கள்
சொன்னபடிசெய்தார்
கீசகன்மடிய
கேட்டகுருநாடர்
வாட்டமில்லாமாடு
ஓட்டிவரவென்று
மச்சைவளநாட்வட

அச்சமில்லாகாட்டில்
ஆனிறையையோட்டி
(ஒருவதியாலொண்ணு)
ஒங்குபுகழ்கர்ணன்
சூரியனுக்குச்சொன்னான்
விராடனுடமாட்டை
ஒட்டிவரச்சொன்னான்
அந்தமாடுவந்தால்
ஐவரங்குயில்லை
இந்தபடிசெய்யும்
திரியோதனனென்றான்
அப்படியேசெய்வோம்
(இருபதியாலொண்ணு)
ஏகவெள்ளம்போலே
வானிரையவிட்டார்
மாடுபிடிசண்டை
போடவேபொருந்தி
பூபதிவிராடன்
புத்திரருஞ்சூழ
ஆனைபரிதேர்கள்
சேனையோடுகூட
தெற்குத்திசைவந்து
திரிகர்த்தனைச்சாடி
முரியஅடித்தாரே
(முப்பதியாலொண்ணு)

விராடனைப்பிடித்து
விந்தைதேரில்கட்டி
தகைந்துகொண்டான்விமன்
தர்மருரையாலே
தாக்கியமராடி
வீக்கியவிராடன்
நோக்குமகிழாக
வந்தவனைக்கட்டி
மன்னவனைமீட்டான்
(நாற்பதியாலொண்ணு)
நால்வர்களும்வந்து
நன்மைசெய்தீரென்று
மன்னவன்மகிழ்ந்தான்
பின்னுமந்தநாட்டை
பெருமையுடன்மீட்டார்
அருமையிதுவென்று
அங்கவரிருக்க
வடக்குதிசைவந்தார்
மன்னன்முதலோர்கள்
(ஐம்பதியாலொண்ணு)
அரவக்கொடிராஜன்
இரவிசிறுபாலன்
கங்கைதருசீலன்
கனத்தபடையாளன்
மிகுந்தபடையோடே

பெருந்தபசுக்கூட்டம்
தாரத்தியேமடக்கி
சூழ்ந்துகொண்டுநின்றார்
(அறுபதியாலொண்ணு)
அங்கிருந்திடையர்
அரசன்மனைக்கோடி
ஆரையுங்காணமல்
உத்திரனைக்கண்டு
மெத்தவேயழுதார்
அஸ்தினபுரத்தில்
அனைவர்களும்வந்து
ஆவினத்தையெல்லாம்
சாய்த்துக்கொண்டு போறு
(எழுபதியாலொண்ணு)
இடையர்சொன்னவார்த்தை
அடவெல்லாமறிந்து
படைமெடுப்பேனென்று
பாலகனெழுந்தான்
பருத்தரதமேறி
பாகனந்தபேடி
ஆகவரும்போதில்
அண்டரண்டமெல்லாம்
கொண்டபடைகண்டான்
(எண்பதியாலொண்ணு)

எங்கெங்குங்குதிரைகள்
கண்கொளாரதங்கள்
எண்ணிறந்தயானை
மண்ணிறந்தசேனை
பேரிகைமுழக்கம்
பெருத்ததிருமேளம்
நெருங்கியகொடிகள்
பொருந்தியகொடைகள்
நேர்ந்தபடைகண்டான்
(தொண்ணூறுட லொண்ணு
சொல்லிமுடியாது
வல்லபசேனை
மன்னவரனேகர்
எந்தரதமோ அம்மா
இந்தமுனைகாண
என்றுமனம்வாடி
துன்றுபனைசேர்வேன்
யென்றெடுத்தாரேட்டம்
இறைவன்மகனப்போ
(300-பிள்ளையாரேவாரி)
பேடியதுகண்டு
ஓடியேதுடர்ந்து
ஓகெடுவாபிள்ளாய்
வாகடுமையாக
தேசினிலிருந்து
சாரத்தியஞ்செய்தால்
தனுவதைவளைத்து
பணியெனப்படுப்பேன்
இனிரதமேரென்றான்
(ஒருவதியாலொண்ணு)
ஓடிவிட்டபாலன்
வாடிரதம்விட்டான்
வன்னியருகோடி
சொன்னசிலேயேந்தி
மன்னவர்மயங்க
அம்புமழைதாவி
அம்பருமயங்க
சம்மதிகளிக்க
சாய்த்துக்கொண்டார் மா
[ட்டை
(இருபதியாலொண்ணு)
எதிர்த்துவந்தகர்னன்
அதிர்த்தரதமோட்டி
அம்புகள்பொழிந்தான்
அர்ச்சுனனுமப்போ
காண்டீபம்வளைத்து
கனமழைசொரிந்தான்
யிணையிலாதகர்னன்
இளைத்தெடுத்தானேட்ட
(முப்பதியாலொண்ணு)

மூன்னுரைந்தநீயே
சொன்னதெல்லாம் விட்டு
தொடைகளெல்லாம் நேர
படைகளெல்லாம்போவ
பார்த்தவர்சிறிக்க
மாற்றவர்மதிக்க
யோடுவதுான்றே
உங்கள்மனங்காண
தங்கள்மனம்நோவ

(நாற்பதியாலொண்ணு)
நல்லமறையாளன்
செல்வனிந்தவாறு
செப்பியேதிரும்ப
ஒப்பிலாதுரோணர்
உயித்தியக்குறித்து
செயித்திருக்கும்பார்த்த
தேர்முன்தேர்விட்டான்
தேசிகன்வரவை
தேர்விசையன்கண்டான்
(ஐம்பதியாலொண்ணு)
ஆசிரியனைக்கண்டு
அர்ச்சுனன்வணங்கி
யிச்சைபலபேசி
யேதுசமரென்றான்

வேதமுனியப்போ
வேந்தநெறியாகும்
போந்திடுதியென்றான்
பொரிக்கணைதொடுத்தா
மருக்கணையும்விட்டான்
(அறுபதியாலொண்ணு)
அண்டத்தவர்க்காக
சண்டைமெத்தசெய்தார்
சதுரங்கபலமும்
சிதறியோடிப்போக
பெரியவர்துரோணர்
பின்னுமபர்செய்தார்
பெரியவில்லும்போக்கி
துரோணருமிளைத்தார்
திரியோதனன்கண்டான்
(எழுபதியாலொண்ணு)
இனியவரெடுப்பார்
தளாாதசேனையெல்லாம்
தக்கஅசுவத்தாமர்
மிக்கபோர்விளைத்தார்
நக்கனருளாளன்
அர்ச்சுனன்வில்னாரி
அத்துவிழவெய்தான்
வெற்றிவந்ததென்றான்
வேந்தனுமகிழ்ந்தான்

(எண்பதியாலொண்ணு)
ஏறுந்தேர்விசையன்
இதற்குத்தோக்கமாட்டா
னென்றுமனமெண்ணி [ன்
சந்திரமவிலி
தந்ததொருபாணம்
அந்தம்பைதொடுத்து
அந்தணனைசாடி
தோர்க்கடிப்போமென்று
துய்பனிவாகி
(தொண்ணூறுடலொண்
(ணு
தோறுதவிசையன்
ஞரியொன்றுபூட்டி
நாலுபாணம்விட்டார்
தேறுபொடிஆச்சு
தேவர்கள்மகிழ்ந்தார்
யாவருமகிழ்ந்தார்
அர்ச்சுனனையப்பேர்
சிறுவனும்எதிர்த்தான்
கீர்த்தியேமிகுத்தான்

(400-பிள்ளையாரேவாரி)
பேருள்ளபெரியோன்
கிறுகளைதீர்த்தான்
வீஷ்மருமெதிர்த்தார்
தாஷ்டீகமுடனே
தனஞ்செயனுமப்போது
அனந்தஅம்புவிட்டான்
அத்தனையும்வீழ
உத்தமனுரைத்தான்
(ஒருவதியாலொண்ணு)
ஓச்சவிலாபாணம்
பாச்சினன்கிழவன்
பார்த்தனுமறுத்தான்
தீர்த்தனன்மேலம்பு
தேர்விசையன்விட்டான்
சாரதிமடிந்து
சலித்தவனிருந்தான்
கெலித்தபடையெல்லாம்
எலிக்கிகிகாச்சே
(இருபதியாலொண்ணு)
எடுப்பாரேட்டமென்பா
நடுக்கமெத்தவானா
ராசகூட்டமெல்லாம்
யோசனையில்வீழ்ந்தார்
ஒங்குவில்விசையன்
மோகனகணையால்
மூர்ச்சையாகச்செய்தார்
ஆச்சரியமாக

அனைவரும்விழுந்தார்
(முப்பதியாலொண்ணு)
மூர்ச்சையென்றராசர்
முடிக்கினியேசேலை
எடுத்துதிரள்வந்தான்
படுத்திருந்தோரெல்லாம்
பாங்குடனெழுந்தார்
தாங்குகுடிசேலை
வாங்கினதரித்தார்
ஏங்கிமனம்நொந்தார்
எடுத்தார்களோட்டம்
(நாற்பதியாலொண்ணு)
நாகக்கொடிமன்னன்
வேகத்துடனோடை
விசையன்கணைவிட்டு
பசையத்தவன்தன்னை
பலபலவாயேசி
இலங்கையகிரீடம்
நிலமிசைவிழ்ந்தான்
நீலகிரிபோல
ஓலமிட்டுதன்னை
(ஐம்பதியாலொண்ணு)
அஞ்சினவர்மேலே
அர்ச்சுனன்தயவாய்
உத்திரனைப்பார்த்து
ஊர்க்குநீதிருப்பு
தோதனையென்றான்
செப்பவேதிருப்பி
ஒப்பொருவரில்லார்
மெய்ப்பொருளைபோலே
விசையனிருந்தானே
(அறுபதியாலொண்ணு)
ஆனவனிசேர்ந்து
அலிவடிவுமாகி
அங்கொருபூங்காவில்
இங்கிதமாநின்றார்
இந்தசிறுபாலன்
வந்தவர்களையெல்லாம்
தந்தைவந்துகேட்டு
சிந்தைநொந்துவிழ்ந்தான்
தேத்திக்கெங்குபட்டர்
(எழுபதியாலொண்ணு)
இங்கிருந்தபேடி
அங்குவருவோரை
மங்கிவிழச்செய்து
மாடுவருமென்று
நாடியவிராடன்
நலத்துடனிருந்தான்
பலத்தவரையெல்லாம்
திறத்திசுபவார்த்தை

ஒருத்தன்வந்துசொன்ன
(எண்பதியாலொண்ணு)
ஏக்கமதுநீங்கி
ஆக்கமதுவாகி
அங்கவரும்வந்தார்
பொங்கினன்விராடன்
சங்கையெல்லாந்தீர
உத்திரனுரைத்தான்
மெத்ததருமராசன்
வெளிப்படமகிழ்ந்தான்
களித்தனன்விராடன்
(தொண்ணூருட் லொண்
துவாரகையிலுள்ள (ணு
துரௌபதைதகப்பன்
சோழமகாராசன்
சுந்தரவழகி
மைந்தனபிமன்னன்
வந்தவர்மகிழ்ந்தார்
உத்தரைதனக்கும்
உத்தநம்பி மன்னவர்க்கும்
நல்லமணஞ்செய்தார்
நாராயணராமா

விராடபர்வ ஏத்தப்பாட்டு.

முற்றிற்று.